தரத்தில் சிறந்த
முயல், வரிக்குதிரை
மான், விளக்கு,
செவன மார்க்
ஓடுகளுக்கு

மு. நா. பொன்னம்பலம்,
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493



UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1979-8-23
PERIODICALS DIVISION



★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆவணி 7 றம்ழான் 29 இதழ் 192
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23-8-79


ஆங்கில எஸ். எஸ். ஸி.
உள்ளவர்களுக்கு

## ஆசிரியர்பதவி

(கொழும்பு)

ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்துமுகமாக ஆங்கிலத்தில் சிரேஷ்ட கல்வி தராதரம் உள்ளவர்களை ஆசிரியர் பதவிகளில் சேர்த்துக்கொள்வதென அமைச்சரவை முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

எஸ் எஸ் ஸி தராதரம் உள்ளவர்களை 60 வயதுவரையில் சேவையில் சேர்த்துக்கொள்வதென முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது புனேஸ்கோ ஆதரவின்கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. (ம)

# லோகசபை கலைக்கப்பட்டது!

## டிசம்பரில் தேர்தல்

## திட்டமிட்ட சதியென ஜனதா கண்டனம்

### புதுச்சேரி, கோவா, சிக்கிம் மணிப்புரி மாநிலங்களுக்கும் தேர்தல்

(புதுடில்லி)

இந்திய லோகசபை கலைக்கப்பட்டு விட்டது. இடைக்கால தேர்தல் நடத்தப்பட வேண்டும் என இந்திய ராஷ்டிரபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி உத்தரவுபிறப்பித்துள்ளார்.

டிசம்பர் மாதம் முற்பகுதியில் இந்திய லோகசபைக்கான தேர்தல் நடைபெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லோகசபை தேர்தலுடன் புதுச்சேரி, சிக்கிம், மணிப்புரி கோவா ஆகிய மாநிலங்களுக்கான தேர்தலும் நடைபெறும் என இந்திய தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

லோகசபையைக் கலைத்து இடைக்கால தேர்தல் நடத்தப்பட வேண்டும் என ராஷ்டிரபதி சஞ்சீவரெட்டி நேற்று அறிவித்தார்

இவ்வறிவிப்பை எடுக்கும் முன்னர் பிரதம மந்திரி திரு. சரண்சிங்குடனும், திரு. சவான், சி. சுப்பிரமணியம், பிரம்மானந்த ரெட்டி ஆகியோருடன் ஜனாதிபதி ஆலோசனை நடத்தினார். இதற்கு முன்னர் ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகருடனும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜகஜீவன்ராமுடனும் திபதி ஆலோசனை நடத்தினார்.

### தேர்தல் நடக்கும்வரை காபந்து அமைச்சு

இடைக்கால தேர்தல் நடக்கும்வரையில் திரு. சரண்சிங் தலைமையிலான மந்திரிசபை காபந்து மந்திரி சபையாக இருந்துவரும். தேர்தல்கள் நேர்மையாக நடைபெறுவது திரு காபந்து அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் உத்தரவாதமளித்துள்ளனர்.

இடைக்கால தேர்தல் நடைபெறுவதை இந்திரா காங்கிரஸ் வரவேற்றிருக்கிறது ஆனால் காபந்து அரசாங்கமாக திரு. சரண்சிங் மந்திரிசபை நீடிப்பதை இந்திராகாங்கிரஸ் ஆட்சேபித்துள்ளது.

லோகசபையைக் கலைத்ததை திரு சரண்சிங்கும் திரு ராஜ்நாராயணனும் திருப்தியுடன் வரவேற்றுள்ளனர்.

#### தேசாய் கண்டனம்

ராஷ்டிரபதியின் நடவடிக்கை அரசியல் சட்டத்துக்கு முரணானது என முன்னாள் பிரதம மந்திரி திரு மொரார்ஜி தேசாய் கண்டித்துள்ளார். இப்போதைய நிலையில் தாம் அரசியலிலிருந்து ஓய்வு பெறும் எண்ணத்தை மறுபரிசீலனை செய்யவேண்டியிருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

(6-ம் பக்கம் பார்க்க)


உ

## திருமண அழைப்பு

மணமகன்
செ. பாலசுந்தரம்
(அரசாங்க நில அளவையாளர்)

மணமகள்
சோ. இந்திராணி

27-08-79 திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கும் 6 மணிக்குமிடையே நடைபெறும் திருமண வைபவத்தில் கலந்துகொண்டு மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அழைக்கின்றேன்.

(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.)

செ. செல்லம்மா

65, நெடுங்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

3374


## ஜனாதிபதியைக் கண்டித்து ஜனதா ஆட்சேபஊர்வலம்

புதுடில்லி, ஆக 23

லோகசபையை கலைப்பதற்கு ராஷ்டிரபதி எடுத்த முடிவை ஆட்சேபித்து ஜனதா கட்சியினர் ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்காக ஊர்வலமாகச் சென்றனர்.

கட்சித்தலைவர் திரு. சந்திரசேகரும் பல ஜனதா எம்.பிக்களும் இதில் கலந்து கொண்டனர் ஆனால் பொலிசார் ஊர்வலத்தை இடையில் தடுத்து நிறுத்திவிட்டனர்.

பின்னர் அவர்கள் ஜனாதிபதியின் இந்த முடிவு முன் கூட்டியே திட்டமிடப்பட்ட சதியாகும் என்று திரு சந்திரசேகர் கண்டித்தார் ஜனாதிபதி தமது பதவியின் தரத்தையே குறைத்துவிட்டார் என்றார் அவர்.

நியாயமற்ற முறையில் லோகசபை கலைக்கப்பட்டு விட்டதாகவும் இதனை தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவதென்றும் ஜனதா கட்சி முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதியின் நடவடிக்கையைக் கண்டித்து ராஜ்யசபையில் தீர்மானம் கொண்டுவருவதென்றும் ஜனதா கட்சி முடிவு செய்துள்ளது.

## உணவுமுத்திரை வழங்கல் 26-ந் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

பொது மக்களுக்கு உணவு முத்திரைகள் வழங்குவது எதிர்வரும் 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்கள் வழங்குவது நவம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகும்.

இத்திட்டம் வெற்றி பெறுவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும்படி உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் சகல அரசாங்க அதிபர்களையும் கேட்டுள்ளார்.


## சுவாமி சச்சிதானந்தா நாளை யாழ். வருகின்றார்

(யாழ்ப்பாணம்)

யோகிராஜ் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தா, மருத்துவத் துறையில் பாண்டித்தியம்பெற்ற தனது சீடர்களான ஆறு மருத்துவக் கலாநிதிகளுடன் நாளை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு விஜயஞ் செய்கின்றார்.

நாளை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாண ஆங்கில வைத்தியர்களின் சங்க அங்கத்தவர்களுக்கும், மருத்துவ பீட மாணவர்களுக்கும் யாழ். ஆங்கில வைத்தியசாலையில் நிகழ்த்துவார்கள்.

25ந் தேதி காலை 10-30 உரை மணிக்கு சுவாமிகளும், அவரின் சீடர்களும் யாழ்ப்பாண



(6ம் பக்கம் பார்க்க)


யாழ். நகர் இளைஞர்களே!
உமக்கு இனியதோர் இலவச

## இசை விருந்து

சனிக்கிழமை 25-8-79 மாலை 6 மணி
இடத்துக்கு முந்துங்கள்.

THIS IS AN AGAPE FORCE PRESENTATION OF "MY BROTHER'S KEEPER" IN CONCERT

வாலிபனே! நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை.

3375

# டாக்டர் நாகநாதனுக்கு வெண்கலச் சிலை

## "சிவா" தலைமையில் அமைப்புக்குழு

(யாழ்ப்பாணம்)
அமரர் டாக்டர் நாகநாதனுக்கு நல்லூர்த் தொகுதியில் வெண்கலத்திலான சிலை நிறுவுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பணியினை நல்லூர்த் தொகுதி எம். பியும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு எம் சிவசிதம்பரமும், தொழிலதிபர் திரு பொ வேலாயுதபிள்ளையும் கூட்டாக மேற்கொண்டு வருகின்றனர்.

சிலை அடுத்தாண்டு அமரர் நாகநாதனது நினைவு தினத்தன்று பொருத்தமான இடத்தில் நிறுவப்படும்.

சிலையைப் பூர்த்தி செய்வதற்கு தேவையானவற்றைத் தெரிவிக்கவுள்ள குழு, வீடு வீடாகச் சென்று வெண்கலப் பாத்திரங்களைச் சேகரிப்பதற்கும், நிதியுதவி பெறுவதற்கும், சிலையை வார்ப்பதற்கு இந்திய சிற்பியொருவரை இலங்கைக்கு வரவழைத்து வேலைகளைத் தொடங்குவதற்குமான வேலைகளைக் கவனிக்கும்.

முதற்கட்டமாக இம்மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிலை நிறுவற் குழுவினர், நல்லூர் எம் பி திரு எம். சிவசிதம்பரத்தின் தலைமையில், நல்லூர்த் தொகுதியிலுள்ள சகல வீடுகளுக்கும் கால்நடையாகச் சென்று வெண்கலப் பாத்திரங்களைச் சேகரிக்கும். பின்னர் மற்றைய தொகுதிகளுக்குச் செல்வர். (செ)

## கல்லூரிக்கு புதிய கட்டடம்

(உடுப்பிட்டி)
கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் 40,000 ரூபா செலவில் புதிய வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இக்கட்டிடவேலைகள் அடுத்த மாத நடுப்பகுதியில் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இக்கல்லூரி மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சினையை நீக்குமுகமாக இங்கு 16,000 ரூபா செலவில் தண்ணீர்த்தாங்கி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (கு)

## குடும்பத்திட்ட கருத்தரங்கு

(புலோலி)
கல்வயல்-ஸ்ரீ சாரதா மகா வித்தியாலயத்தில் இலங்கை குடும்பநலத்திட்டச் சங்கத்தினர் பெண்களுக்கான கருத்தரங்கொன்றை இம்மாதம் 24ம் திகதி நடாத்தவுள்ளனர்.

குடும்பநல திட்டமிடல் அதிகாரி திரு சந்திரதாசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் பெண்களுக்கான பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

## கார்ட்டர் பரிசிலனையில் மஸாஸூசெட்ஸ்

(கொழும்பு)
"இலங்கைத் தமிழரது நிலை குறித்து மஸாஸூசெட்ஸ் மாநிலப் பாராளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானம், அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டரது பரிசிலனையிலுள்ளது."

இத்தகவலை, இலங்கை வந்துள்ள அமெரிக்க காங்கிரஸ் குழுத் தலைவர் திரு. லெஸ்டர் வூல்வ், கொழும்பு காலிபேஸ் ஹோட்டலில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்டார். (செ)

## வேலவா நீ ஓடிவா!

அரக்கர் குலத்தை அழித்துப் பகைவென்று
அச்சம் களைந்தகூர் வேலவா — தேவர்
மெச்சும் கதிர்வடி வேலவா!
சுரக்குமுன் பேரருள் வேண்டுகின் றேமெமைச்
சூழும் பகைபொடி யாக்குவாய்! — உமை
முழும் பயத்தினைப் போக்கிவாய்!

வள்ளிக் கொடியிடை வாழ்ந்த குறத்தியை
வாழ்வில் கலந்தநல் வேலவா! — புவி
வாழ்வைக் கரைசேர்க்கும் வேலவா!
உள்ளத் திருவிடை ஒன்றிய என்னுயிர்
உன்னை யறிந்திடச் செய்திடாய்! — நான்
என்னை யறிந்திடச் செய்திடாய்!

வையத்தில் இன்பத்தின் எல்லையைக் கண்டுதன்
வாழ்வை அழிக்க விழைந்தவன் — இன்ப
வாழ்வுபெண் ணுெடன் றிழிந்தவன்
உய்ய வழிசெய்ய உன்னைப் பொருளுக்கு
உரியவ னாக்கினாய் வேலவா! — அருண
கிரிக்கருள் தேக்கினாய் வேலவா!

பொன்னுக்கும் மண்ணுக்கும் புகழுக்கு மாயிந்தப்
பூதலத் துள்ளவர் வாழ்வதா? — காலம்
போதல் அறியாது மாழ்வதா?
பின்னுக்கு ஏதுவ ரோடுமின் னேகிடும்?
பேதைமை போக்கிடு வேலவா! — ஆசை
மோதலை நீக்கிடு வேலவா!

அரக்கர் குணத்தை அழித்திருள் சூழ்ந்திடும்
அகத்தினி லேயொளி கூட்டுவாய்! — இந்த
இகத்தினி லேவெழில் கூட்டுவாய்!
சுரக்குமுன் பேரரு ளாலெமைச் சூழ்ந்திடும்
தொல்லை சிதைத்திட ஓடிவா! — அருள்
நல்லைப் பதியெழுந் தோடிவா!

--- க. கணேசலிங்கம்

### மக்கள் கருத்து!

## பூநகரிக்கு புதிய பஸ் சேவை வேண்டும்

பூநகரியில் இருந்து சங்குப்பிட்டி-கேரதீவு வழியாக யாழ். குடாநாடு நோக்கி நாள்தோறும் பல நூற்றுக்கணக்கான பிரயாணிகள் பிரயாணம் செய்கின்றனர். போதிய பஸ் சேவை இல்லாதபடியால் இவர்கள் அனுபவித்துவரும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. சொல்லிவிட முடியாது. பல மணித்தியாலங்களை பஸ்ஸுக்காகக் காத்திருப்பதிலேயே செலவிடுகின்றனர். இம் மக்களின் போக்குவரத்துக் கஷ்டத்தைக் குறைத்திட ஒரு புதிய பஸ் வாடியடிக்கும் சங்குப்பிட்டிக்கும் இடையே குறுகிய சேவையாக ஈடுபடுத்தப்படவேண்டும். அத்துடன் இப் புதிய பஸ் பூநகரியில் இருந்து பல்லவராயன்கட்டு குடியேற்றம்வரை நாள் ஒன்றில் இரு தடவை சேவைக்கு விடப்படவேண்டும்.

பூநகரி - கிளிநொச்சி பஸ் சேவை அடிக்கடி தடைப்படும். நேரசூசிகைக்கு இணங்காமல் ஒழுங்கின்றியும் நடப்பது வழக்கமாகிவிட்டது. கிளிநொச்சிச் சந்தை கூடும் சனி, புதன் தினங்களில் விவசாயிகளினதும் சிறு வியாபாரிகளினதும் வசதி கருதி, ஒரு பஸ் சேவையாவது அதிகரிக்கப்படவேண்டும்.

மேற்குறித்த விடயங்களில் வடபிராந்திய போக்குவரத்துச்சபை கவனம் எடுத்து பின்தங்கிய எமது மக்களின் கஷ்டத்தைக் குறைக்கும் என்று நம்புகின்றோம்.

கா. கார்த்திகேசு
(செயலாளர்)

கறுக்காய்த்தீவு,
கிராம அபிவிருத்திச் சங்கம்
பூநகரி.

# இறவாப்புகழுடைய பேராசிரியர்

சிலர் பிறக்கும்போதே பெருமையோடு பிறக்கின்றார்கள். சிலர் பெருமையை தேடிக்கொள்கிறார்கள். சிலரிடம் பெருமை சென்றடைகின்ற கருத்துப்பட ஓர் ஆங்கில அறிஞன் எழுதிவைத்தான். பிறக்கும்போதே பெருமையடைந்தவர்களைப் பற்றிப் பல கேட்டிருக்கிறோம். கண்டதில்லை. பெருமை எய்த வேண்டும் என்ற ஆசையினால் எதைஎதையோ முயன்றும் திருப்தி அடையாமையினால் மனம் தளர்ந்து நின்றவர்களைக் கண்டிருக்கின்றோம். என்னைப் போன்றவர்களும் இவ்வினத்தை சேர்ந்தவர்களே. சிலரிடம் பெருமை சென்றடைகின்றது என்றார் இவ்வினத்தைச் சேர்ந்தவரே பேராசிரியர் "செல்வா" சிலரைப் பெருமை சென்றடைவதால் பெருமை பெருமை பெறுகிறது. அநுமன் வாயிலாக தனக்குச் சீதையை அறிவிக்கும்போது கம்பன் ஓர் உத்தியைக் கையாளுகிறான். "தவம் செய்த தவமாம் தையல்" என்பது அது. இது காப்பிய சாகசம். ஆனால் பேராசிரியர் செல்வா எம்மிடையே வாழ்ந்தவர். உலகின் மேடுபள்ளங்களை உணர்ந்தவர். இவரை சென்றடையப் பெருமை தவம் செய்தது. சென்றடைந்தும் பெருமையே பெருமை பெற்றது என்கின்றேன்.

பேராசிரியரின் சிலநிலைகளை நெருங்கி நின்று கண்டவன். உணர்ந்தவன் என்ற வகையில் அவரிடம் பெருமை சென்றடையக் காரணமாக விளங்கிய ஒருசில பண்புகளை நினைத்துருகக் கடமைப்பட்டவன் என நினைக்கின்றேன் என்று கூறுவதால் தவறுசெய்தவனாகிவிடுவேனோ என்றும் அஞ்சுகின்றேன். இவரின் பண்புகள் மறக்கவும் போமோ.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் கற்கத் தொடங்கிய நாள்தொடக்கம் மாணவன் என்ற உரிமையோடு நெருங்கிப்பழக வாய்ப்பு கிடைத்தது. "பேராசிரியர் செல்வா" பழைய இலக்கண நூலார் படம்பிடிக்கும் ஆசிரியரா? அன்றித் தற்காலக் கல்வியாளர் படம்பிடித்துக் காட்டும் ஆசிரியர் இனத்தைச் சேர்ந்தவரா என்று ஆய்வுசெய்தால் அதுவே ஒரு பட்டம் வாங்கக்கூடிய ஆய்வாக அமையலாம். பேராசிரியரிடம் இரு இன ஆசிரியர்களிடையே காணப்படும் சிறப்பெல்லாம் திரண்டுநின்றன. மாணவர்களிடம் கட்டுப்பாட்டை, ஒழுங்கை, நேர்மையை எதிர்பார்த்தார். திறமைப்பாடு பிறவிப்பேறு என்று கருதிவலராக எப்பவும் தெரியவில்லை. முயற்சி திருவினையாக்கும் என்ற முதுமொழியில் அசையாத நம்பிக்கையுடையவர். முயற்சி செய்யுங்கள் என்று போதிப்பதிலும் பார்க்க தானே மிக்க முயற்சியுடையவராக வாழ்ந்துகாட்டி மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர்.

புவியியல் என்ற வட்டத்துள் மட்டும் "பேராசிரியர் செல்வா" செயல்படவில்லை. தமிழ் இலக்கியம், சமுதாயம், சமயம் எனப் பலதுறைகளிலும் இவர் சிந்தனைப் பொலிவும் கைவண்ணமும் திறம்படத் தொழிற்பட்டன. தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள்-இங்கும்-எங்கும்-இவர் கருத்துரையும் சொற்சிறப்பையும் பெற்றன. இலக்கிய விழாக்கள் சமுதாய கருத்தரங்குகள் இவரின் பங்களிப்பைப் பெற்று சிறப்படைந்தன. நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கவல்லதொரு சாதனம் சமய வாழ்வு என்று தம் ஆய்வின் வழியும் அனுபூதி வழியும் பெற்ற நம்பிக்கையை செயற்படுத்த என்றும் தயங்கியதில்லை. பேராதனையிலும் யாழ்ப்பாணத்திலும் பேராசிரியர் மேற்கொண்ட சமயப் பணிகள் இதற்கு சான்று பகரும்.

— கார்த்திகேசு குகபாலன் —
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

பேராசிரியர் தன் அலுவலகத்திற்கோ விரிவுரைகளுக்கோ காலந்தாழ்ந்து வந்தது கிடையாது. விரிவுரைகளை நிகழ்த்தும்போது எவ்வளவு ஆழ்ந்த அகலமான ஆயத்தம் செய்திருந்தார் என்பதை இலகுவில் தெரிந்துகொள்ளமுடிந்தது. பாடத்தை அதுவும் புவியியலை சுவைபட நடத்தும் இவர் திறன் ஒரு தனித்திறனே. புவியியல் போன்ற பாடங்களை தமிழில் திறம்படக் கற்பிக்க முடியுமா? கருத்துக்களை எடுத்து விளக்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டா? ஆங்கில மொழி மூலம் கற்ற விரிவுரையாளர்களுக்கு இது வருமா? என்றெல்லாம் சிந்திக்கவும் பேசவும் செய்த ஒருகாலகட்டத்தில் பேராசிரியர் புவியியலை இலக்கிய ரசனையோடு கற்பிக்கத் தொடங்கி வெற்றிகண்டார் என்பதும் மேல்நாட்டு நல்லறிஞர் நூல்களைத் தரங்குன்றாத செழுமையோடு மொழிபெயர்த்துத் தந்தார், என்பதும் நாடறிந்தவையாகும். தன்துறையிலும் பிறதுறைகளிலும் அவ்வத்துறை அறிஞர் மெச்ச ஆக்கிய கட்டுரைகள் தாம் எத்தனை?

ஆம் பேராசிரியர் மேற்கொண்ட சமயப் பணிகள் இதற்கு சான்று பகரும்.

கல்வி வகுப்பறையோடு நின்றுவிடக்கூடாது. ஏட்டுச் சுரைக்காயாய் அமைந்துவிடக்கூடாதென்ற கொள்கை உள்ளவர் பேராசிரியர். பல்கலைக்கழகம் "நல்லதொரு குடும்பம் என்கிறார்கள். இல்லை, பல்கலைக்கழகம் ஒரு சமுதாயம்! கொடுத்து வைத்த சமுதாயம், தான் பெறும் பேற்றை வாய்ப்பற்றவர்களுக்கும் பகிர்ந்துதர வேண்டும் என்ற பெருநோக்குடையவர். இவர் மேற்கொண்ட ஆய்வுகள், மேற்கொள்ள திட்டமிட்டவைகள் அறிவைப் பரவலாக்கிப் பயன்செய்திருக்கும். நாம் கொடுத்துவைக்கவில்லை.

பேராதனையிலும் யாழ்ப்பாணத்திலும் இவருடன் சேர்ந்து அவரின் கீழ் ஒரு விரிவுரையாளராகச் சேவை செய்யக் கிடைத்த வாய்ப்பை நினைக்க இனிக்கும். பேராசிரியர் புவியியற்துறையில் மூத்தும் போகிய முதுபெரும் அறிஞர், நான் கற்றுக்குளி. எத்தனை அன்போடும் அனுசரணையோடும் வழிப்படுத்தினார். இருந்தபோது கண்டிப்பிருக்காது கனிவிருக்கும், வித்துவச் செருக்கிருக்காது வினயமிருக்கும். இப்படி இருந்தால் நல்லாய் இருக்குமா? என்ற கேள்வி இயல்பான புன்சிரிப்போடு வரும்போது ஏடுகள் கற்பிக்க முடியாத பாடங்கள் எத்தனை, எம்முன் விரிந்து கிடந்தன. அது ஒரு தனி அனுபவம். இம்முறையையே மாணவரிடம் கையாண்டார். "பேராசிரியர் செல்வாவுடன் உரையாடுவது பாடத்தொடர்பாக இருந்தாலும்சரி உலகியலாக இருந்தாலும் ஒரு இன்பமான நிகழ்ச்சி. பல்வேறு துறைகளில் பேராசிரியர் பெற்ற அறிவுச் செழுமையின் ஊடே தமிழ்த்தென்றல் வீசிக் கேட்போரை இறுகிருக்க வைக்கும். இத்தென்றலில் வாழ்ந்த காலத்தை நினைந்து ஏங்கும் என்போன்றோர் கணக்கிலார். தனிப்பட்ட பிரச்சினைகளைக் கொண்டு தீர்வுகாண எத்தனை பேர் எத்தனைதரம் பேராசிரியர் செல்வாவிடம் சென்றிருப்போம். அப்போதெல்லாம் பிரச்சினைகளை கருணையுடன் அணுகிதன் ஆழ்ந்த அனுபவத்தின் பயனால் முகிழ்த்தெழும் அறிவு தோய்ந்தஆற்றுப்படை

(5-ம் பக்கம் பார்க்க)

## பொன்விழா

(பண்டத்தரிப்பு)
வடலியடைப்பு கலைவாணி சனசமூகநிலையத்தின் 25 வருட நிறைவையொட்டி நடைபெறும் வெள்ளி விழா இம்மாதம் 25ம் திகதி நிலைய முன்றலில் திரு க. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக வட்டுக்கோட்டை எம். பி திரு தா. திருநாவுக்கரசுவும் கௌரவ விருந்தினராக எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் கலந்துகொள்வார்கள். யாழ் மாநகரசபை மேயர் திரு. இ. விசுவநாதன், சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு, திரு. நாக. பத்மநாதன், உட்படபலர் உரையாற்றுவர்கள். கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (கு)

**நேற்றுப் பகல்வரை கிடைத்த செய்தி**

# மூன்று விஷயங்கள்குறித்து

# ஜனுதிபதி மந்திராலோசனை!

(புதுடில்லி)

இந்திய அரசியல் நிலைமை பற்றி கட்சித் தலைவர்களுடனும், சட்ட நிபுணர்களுடனும் நேற்று மூன்றுவது நாளாகத் தொடர்ச்சியாக மந்திராலோசனை நடத்திவரும் பாரத ராஷ்டிரபதி திரு நீலன் சஞ்சீவரெட்டி, நேற்றுப்பகல்வரை எந்தவித முடிவையும் மேற்கொள்ளாததால் இந்திய அரசியலில் நிச்சயமற்ற தன்மை தொடர்ந்து நீடிக்கிறது.

இச்செய்தியை எழுதிக் கொண்டிருக்கும்வரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, பாரதராஷ்டிரபதி மூன்று சாத்தியக்கூறுகள் பற்றி தீவிர ஆலோசனை நடத்திவருகின்றூர் என்றும், இதில் ஒரு அம்சத்தை அவர் எந்தநிமிடத்திலும் ஏற்றுக்கொண்டு அறிவிக்கலாம் என்றும் தெரியவருகிறது.

## மூன்று விஷயங்கள்

(1) காபந்து பிரதமர் திரு சரண்சிங் தெரிவித்த ஆலோசனைக்கிணங்க லோக்சபையைக் கலைத்து இடைத்தேர்தலை நடத்துவது அல்லது;

(2) எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன்ராமை அழைத்து அரசாங்கம் அமைக்குமாறு கோருவது அல்லது;

(3) அனைத்துக்கட்சி பராமரிப்பு அரசு (தேசிய சர்வ கட்சி அரசு) அமைப்பது.

இம்மூன்று விஷயங்களில் ஏதோவொன்றாக மூன்றுவது அம்சம் நடக்கமுடியாதது என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

சர்வகட்சிகள் அடங்கிய தேசிய அரசாங்கமொன்றை அமைக்குமாறு கட்சித் தலைவர்களுக்கு ராஷ்டிரபதி ஆலோசனை கூறியபோதிலும் இதனைப் பல கட்சிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரியவருகிறது.

ஒரு இடைக்கால ஏற்பாடாக இது அமையட்டும் என்றும் இதனைத் தொடர்ந்து இடைத்தேர்தலை நடத்தலாம் என்றும் ராஷ்டிரபதி தெரிவித்தபோதிலும், இந்த யோசனையையும் கட்சித் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையாம்.

நேற்றுக்காலைகூடிய ஜனதா பாராளுமன்ற நிர்வாகக்குழு, ஏகமனதாக ஒருமுடிவை மேற்கொண்டு ராஷ்டிரபதிக்கு அனுப்பிவைத்துள்ளது. திரு. ஜெகஜீவன்ராமை அழைத்து ஆட்சியமைக்கக் கூறுமாறு கோரும்படியும் தமது அரசாங்கத்தின் பலத்தை லோக்சபையில் சந்தர்ப்பம் வரும்போது அவர் நிரூபிப்பார் என்றும் இத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

ராஷ்டிரபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டியைச் சந்தித்த பின்னர் ஜனதா கட்சித்தலைவர் திரு. சந்திரசேகர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்; அரசு அமைக்க திரு. ஜெகஜீவன்ராமை அழைக்குமாறு தாம் ராஷ்டிரபதியை வலியுறுத்தியபோது, "கட்சி மாறுவோருக்கு இது ஊக்கம் அளிக்குமே" என்று அவர் தம்மிடம் தெரிவித்ததாகவும், இதற்குத் தாம், திரு. சரண்சிங்கும் கட்சிமாறியவர்தானே என்று பதிலளித்ததாகவும் கூறினார்.

இதற்கிடையே, காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் பேசிய திரு. வை பி சவான்; சரண்சிங்கின் இடைத்தேர்தல் யோசனையை தாம் வெகுவாக வரவேற்பதாகக்கூறி, இந்த யோசனை தேசிய நலன்களுக்கு உகந்தது என்றும் தெரிவித்தார்.

நிலைமை இவ்வாறு இருக்க, மத்தியில் நிலவும் பதட்ட நிலைமை குறித்து தமது கட்சி எம். பி.க்களுடன் ஆலோசனை நடத்த தமிழக முதல்வர் திரு எம் ஜி ராமச்சந்திரன் புதுடில்லி வந்துள்ளார்.

அ. இ. அ. தி. மு. கழகத்திலிருந்து ராஜினுமா செய்த திரு மாயத்தேவர் நேற்று நிருபர்களிடம் தெரிவிக்கையில்; ஜெகஜீவன்ராமை பல அ. இ. அ. தி. மு. கழக எம். பி.க்கள் ஆதரிப்பதாகவும், இவர்களின் பெயர்களை வெளியிடத்தாம் விரும்பவில்லை என்றும் கூறினுர்.

### ஈரானில்

## 3 பத்திரிகை நிருபர்கள் நாடுகடத்தப்பட்டனர்!

### ஒருவர் பி. பி. ஸி. நிருபர்

(தெஹ்ரான்)

ஈரானில் செய்தித் தணிக்கை கடுமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து மூன்று வெளிநாட்டு நிருபர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்

நாடு கடத்தப்பட்டவர்களில் ஒருவர் பி பி ஸி நிருபர் மற்றுமொருவர் பிரெஞ்சுப் பத்திரிகையொன்றின் நிருபர்.

இதுபற்றி மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி கருத்துத் தெரிவிக்கையில் மேலும் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

### ஈரானிய ஷா

## சுவீடனிடம் அரசியல் புகலிடம் கோருகிருர்

(ஸ்டாக்ஹோம்)

முன்னுள் ஈரான் மன்னர் ஷா, சுவீடன் அரசாங்கத்திடம் அரசியல் புகலிடம் கோரியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் ஈரானை விட்டு வெளியேறிய ஷா இப்பொழுது மெக்ஸிகோவில் இருக்கின்றூர்

முன்னுள் மன்னர் அரசியல் புகலிடம் கோரியபோதிலும் சுவீடன் அரசாங்கம் இது குறித்து உடனடியாகக் கருத்து எதுவும் வெளியிடவில்லை.

## ரயில் விபத்து: 50 பேர் பலி

(பாங்ஹாக்)

இங்கு நேற்று முன்தினம் ஏற்பட்ட ரயில் விபத்தில் ஐம்பது பேர் பலியானுர்கள். 155 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை வரை 44 பேரின் சடலங்களை பொலிசார் கண்டெடுத்தனர்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்ஹாக் அருகே நிகழ்ந்த இக்கோர ரயில் விபத்து, தாய்லாந்து வரலாற்றில் ஏற்பட்ட மிகமோசமான ரயில் விபத்து என்று வர்ணிக்கப்பட்டுள்ளது

## சிங்கப்பூரில் பிரேமதாசா

(சிங்கப்பூர்)

சீனுவில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்று சிங்கப்பூர் வந்துசேர்ந்தார்

இங்கு அவர் ஆறு தினங்கள் தங்கியிருப்பார்.


# கட்பெறீஸ் போண்விற்றுப்போட்டியில் ஒவ்வொரு மாதமும் 4 பரிசுகள் வெல்லுங்கள்




இவை நாலும் இம் மாதம் உங்களுக்குக் கிடைக்கலாம். கட்பெறீஸ் போண்விற்ரு சுவைமிக்க, சொக்லேற் உணவுப் பானம். இதில் பால், கொக்கோ, முட்டை, குளுக்கோஸ், மோல்ற் ஆகியன உண்டு. சூடாகவோ, குளிராகவோ நாளுக்கு இரண்டு தடவை உட்கொண்டால், நாள் முழுவதுமே திடகாத்திரத்துடனிருக்கலாம்; குடும்பத்திலுள்ள அனைவருக்கு மேற்றது.

அத்துடன், ஒவ்வொரு ரின்னும் உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் நாலு பரிசுகள் வெல்ல சந்தர்ப்பமளிக்கிறது.

**விதிகள்**

எத்தனை விடைகளும் அனுப்பலாம் ஆனல் ஒவ்வொன்றுடனும் கட்பெறீஸ் போண்விற்று ரின் உள்ளே இருக்கும் தகடு இணைக்கப்படவேண்டும்.

மாதம் முழுவதும் கிடைக்கும் விடைகள் ஒன்று சேர்க்கப்பட்டு, அடுத்த மாதம் முதலாவது வேலை நாளன்று அதிஷ்ட இழுப்பில் திறக்கப்படும் முதலாவது சரியான விடைக்கு பரிசு வழங்கப்படும்.

பரிசிழுப்பின் பின்னர் 7 நாட்களுக்குள் பரிசு பெறுபவரின் பெயர் பத்திரிகைகளில் வெளியிடப்படும்,

டெல்மேஜ் ஃபோர்சைத் அன்ட் கோ. லி., கறட்ஸ் அட்வேற்றைசிங் ஆகிய தாபனங்களில் வேலைபார்ப்பவர்களும், அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியிற் கலந்து கொள்ளமுடியாது.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. இது சம்பந்தமாகக் கடிதப்போக்குவரத்து நடத்தபடவோ, விசாரணைகள் ஏற்றுக் கொள்ளபடவோ மாட்டாது.

போட்டி: இடது கோடியிலுள்ள எழுத்துக்களை மாற்றி எழுதினல் சுவைமிக்க உணவுப்பானமொன்றின் பெயர் வரும்,
வலது பக்கத்திலுள்ள அடைப்புகளில் அதனை எழுதவும்

| வி | போ | ரு | ற் | ண் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

எனக்குப் பரிசு கிடைத்தால்:
நான் விரும்புவது:

பெயர்: ______
விலாசம்: ______

திகதி ______

இக் கூப்பனை உள்ளேயுள்ள தகட்டுடன் அனுப்ப வேண்டிய விலாசம்:
கட்பெறீஸ் போண்விற்று போட்டி,
த. பெ. எண். 45, கொழும்பு.

S 220

**வெலிங்டன்** தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-45
(யாழ்ப்பாணம்)
ஒளவையார்
25-8-79 முதல் பொம்மலாட்டம்

**லிடோ** போன் 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ் நகர்)
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

**வின்சர்** போன்: 466
தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-00, 6-00 9-30
சோபன்பாபு-விஜய லலிதா நடித்த
**ரிவோல்வர் ரீட்டா**

**REGAL** (Jaffna) 3rd CROWDED WEEK
Daily 10-30, a m. 2-00, 4-30, 7-00 p.m. only
No Passes Please
**THE OMEN**
Twentieth Century Fox presents
GREGORY PECK—LEE REMICK
விநாடிக்கு விநாடி உங்களை மெய்சிலிர்க்க வைக்கும் பயங்கரப் படம்.
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

**மனோகரா** தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
கடைசி இரண்டு தினங்கள் மட்டும். எக்காரணங் கொண்டும் மேலும் நீடிக்கப்படமாட்டாது.
**சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்**
(கலர்)
இதுவே கடைசி சந்தர்ப்பம்.
ரம்ழான் புதிய மறு வெளியீடு
25-8-79 முதல் **இருமலர்கள்**

**SHANTHI** JAFFNA Phone: 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30
The Greatest Sea Adventure In History Has Just Begun!
RICHARD HARRIS—OMAR SHARIF in
**"JUGGERNAUT"**
Adventure — Suspense — Color
சாதாரணமாகச் சமுத்திரத்தில் நடமாடும் பாரிய கப்பல்களில் நடைபெறும் நாளாந்தச் சம்பவங்கள், விமானத்திலிருந்து பரசூட்டில் இறங்கும் விமானிகள் அவர்கள் சமுத்திரத்திலிருந்து கப்பல் சிப்பந்திகளால் காப்பாற்றப்படுதல் ஆகிய சாகசங்கள் நிறைந்த படம்.
கொந்தளிக்கும் சமுத்திரத்தில் பிரமாண்டமான 'பிரிட்டானிக்' கப்பலில் நடக்கும் சம்பவங்களை குழு குழு வர்ணத்தில் உங்கள் முழுக் குடும்பத்துடனும் பார்த்து மகிழுங்கள்.
27-8-79 **"MR. RICCO"** Scope - Color Action-Packed Movie

**ராணி** இன்று மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்) சிவாஜி-ஜமுனா
**நிச்சய தாம்பூலம்**
(புதிய பிரதி)
நாளை முதல் ஜெமினி, தேவிகா நடித்த
ஸ்ரீதரின் சுமைதாங்கி

**ராஜா** தினசரி 4 காட்சிகள்
யாழ் நகர் எம் ஜி.ஆர் -ஜெயலலிதா-நாகேஷ் நடித்த
**அன்னமிட்டகை**
(புதிய பிரதி)

2-வது வெற்றி வாரம்
**SRIDHAR-Jaffna** ஸ்ரீதர்
at 10-30 a m, 3-00 & 7-30 p m
CECIL B DEMILLE'S
பிரமாண்டமான வெளியீடு!
**TEN COMMANDMENTS**
**பத்துக் கட்டளைகள்**
(புதிய டெக்னிக் கலர்—ஆங்கிலம்)
Color
Starring; Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER


## இலங்கை கல்வி, கலை

# பண்பாட்டுக் காப்புக்கழக கட்டட கால்கோள் விழா

### நாளை நடைபெறுகிறது

[யாழ்ப்பாணம்]

இலங்கை கல்வி, கலை, பண்பாட்டுக்காப்புக்கழக கட்டிட கால் கோள் விழா இம்மாதம் 24ம் திகதி நாளை சொட்டடி வில்லூன்றிப் பிள்ளையார் கோவில் முன்பாக உள்ள மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

தமிழ்நாடு செட்டிநாட்டரசர் "தமிழிசை காவலர் டாக்டர் எம் ஏ முத்தையா செட்டியாரின் கனிஷ்ட புதல்வர் திரு எம் ஏ.எம் இராமசாமி இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர்.

தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் எஸ். பி. சோமசுந்தரம், நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்.

24ம் தேதி மாலை 6 மணிக்கு திருமதி நாகேசுவரி பிரேமானந்தாவின் இறைவணக்கத்துடன் விழா ஆரம்பமாகும்.

கழக காப்பாளர் பேராசிரியர் க. வித்தியானந்தன் வரவேற்புரை நிகழ்த்துவார். கழகத் தலைவர் சட்டத்தரணி சி. சோமசுந்தரம் தலைமையுரை நிகழ்த்துவார். கழக பொதுச்செயலாளர் ஓவியர் ச. பெனடிக்ற் கழகத்தின் குறிக்கோள் பற்றி பேசுவார்.

டாக்டர் எஸ். பி. சோமசுந்தரம், திரு. எம். ஏ. எம். இராமசாமி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்கள்.

இரவு 7-15 மணிக்கும் சமய அருளாளர்களின் வழிபாடுகளுக்கும், வாழ்த்துக்களுக்கும் மத்தியில் கால்கோள் நிகழ்ச்சி நடைபெறும்.

இரவு 9 மணிக்கு மலர் வெளியீடு நடைபெறும். யாழ். நகர முதல்வர் திரு. ஆர். விஸ்வநாதன் முதற் பிரதியை வாங்குவார்.

இம்மாதம் 25ம் தேதி மாலை யாழ். திறந்த வெளி அரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு மங்கள இசை [நாதஸ்வரம்] திருவாளர்கள் என் கே பத்மநாதன் பி எஸ் ஆறுமுகம்பிள்ளை, வி ஏ பாலகிருஷ்ணன் வி கே காளமூர்த்தி ஆர் கேதீஸ்வரன் [தவில்] திருவாளர்கள் பி ஸ் இராஜகோபால் என் ஆர் சின்னராசா, கே கணேசபிள்ளை, வி என் குமரகுரு கே ஆர் புண்ணியமூர்த்தி.

மாலை 6 மணிக்கு திருமுறை ஓதல்-திருமதி சரோஜினி சிவகுருநாதன், திருமதி ஜெகதீஸ்வரி சந்திரபாலன்

மாலை 6-20 மணிக்கு இசை அரங்கு திருவாளர்கள் என் சண்முகரத்தினம், பரம்நிலைராசா, ராம்குமாரசாமி, எஸ் பாலசிங்கம், ஏ கே கருணாகரன், திருமதி பக்கியராசா செல்வி இராச இலக்குமி கனகசபாபதி.

வயலின் திருவாளர்கள் வி குமாரசாமி ஆர் இராதாகிருஷ்ணன், செல்வி தனதேவி சுப்பையா, திரு ரி பி பிச்சையப்பா.

இரவு 8 மணிக்கு கழகக் காப்பாளர்கள் அருள்திரு சேதனிநாயகம் அடிகளார், தவத்திருஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் வாழ்த்துரை வழங்குவர்.

இரவு 8-20 மணிக்கு யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை கழகத்தை சேர்ந்த செல்வி சாந்தா பொன்னுத்துரை குழுவினரின் பரதநாட்டியம்.

திரு க செல்லத்துரை நன்றி தெரிவித்துபேசுவார். [ச]

## இறவா...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களால் எம்மை ஆற்றி ஆறுதல் செய்யும். இப்பண்புகளை எல்லாம் தனதாக்கி தானே அவையாகி வாழ்ந்து வழிகாட்டிய பண்பாளனே பெருமை சென்றடைந்து பெருமைப்பட்டது என்கின்றேன்.

பேராசிரியர் செல்வநாயகம் ஒரு புவியியல் பேராசிரியராக மட்டும் எம்மத்தியில் உலாவவில்லை. ஆசிரியனாய், நண்பனாய், அண்ணனாய், தந்தையாய், மாணவனாய், அலர்ந்தோர்க்கு அளிக்கும் வள்ளலாய் ஆன்றவிந்தடங்கிய சான்றோனாய் வாழ்ந்தவர், வழிகாட்டியவர். "இவர் ஒரு நிறைவாலயம்".


**RIO** (Jaffna-TownHall)
Phone: 7607
2ND
CAR CRASH WEEK
Daily 4 Shows,
**DRIVER**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார் ஜானகி
**பார் மகளே பார்**

**வெல்லி**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
**ஆலயமணி**


# இன்றைய பலன்

ஆவணிமாதம் 7-ம் திகதி வியாழக்கிழமை
(23-8-1979)

**மேடம்:** உள்ளப்படுதாவின் உவகை கூத்தாடும், உறவினர்கள் உதவுவதற்கு முன் வருவார்கள், பத்திரிகைத் துறையில் தொழில் புரிவோர் பாராட்டுகளைப் பெறுவார்கள்.

**இடபம்:** கடமையில் முதலிடம் கிடைக்கும், பதவியில் உயர்வுக்கும் இடமுண்டு, வியாபாரத்துறையில் தொடர்புகள் பெருகும்.

**மிதுனம்:** நிதியில் அபிவிருத்தி தென்படுகிறது. பூமி கொள்வனவு செய்வதில் மூலதனம் முடக்கப்படலாம், பத்திரிகைத் தொடர்புகளுக்கு முன்னேற்றமான தினம், மூலதி அவசியமாகும்.

**கடகம்:** தானிய விருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம், விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள், அதிசிந்தனையின் மூலம் சிறிய தலைவலியும் தோன்றக்கூடும், அமைதி விரும்பத்தக்கது.

**சிங்கம்:** பின்னோரின் தொல்லை கவலையைத் தரும், பிறருடன் பகைத்துக்கொள்ளவும் நேரிடும், குடும்பத்திலும் சிறிது புயல் வீசலாம், வெளியிடத் தொடர்புகளில் அமைதி வேண்டும்.

**கன்னி:** இக்காலத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும், இவைபற்றுக்கள் உமக்கு உற்சாகப்படுத்துவார்கள், நீண்டநாள் பூமிப் பிணக்கு இன்று தீர்த்திவாகும், தானிய விருத்திக்கும் இடம் உண்டு.

**துலாம்:** தங்கள்வரும் வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையைச் சோபிதமடையச் செய்யும், எதிர்பாராத விருந்தினர் வருகைக்கும் இடம் உண்டு, ஒரு பெண்ணின் மூலம் அதிக ஆதரவும் கிடைக்கலாம்.

**விருச்சிகம்:** வாகனச் சாரதிகள் பொது மக்களின் நன்மதிப்பைப் பெறுவர். தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும் மேலிடத்து பரிசும் கிடைக்கும்.

**தனுசு:** கலையுலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் பரவும், சிலர் புதிய வாகனத்தை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்துவர், வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

**மகரம்:** ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும், எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும், வேண்டாத நடவடிக்கையின் மூலம் நண்பர்களை பகைத்துக்கொள்ள நேரிடலாம்.

**கும்பம்:** வாழ்க்கையில் தென்றல் வீசும், முதியவர்கள் உங்களுக்கு உதவுவதற்கு முன் வருவார்கள், குழந்தை ஒன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும் தெய்வத்தின் துணையுண்டு.

**மீனம்:** சூழ்ச்சி வலை பின்னும், அடுத்துக் கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர், சகோதரவழியால் சஞ்சலமான சம்பவங்கள் இடம் பெறும், கடன்பட நேரிடலாம், மனஅடக்கம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## பிரசவத்திற்கு அனுமதிப்பதில்லையாம்

[வேலணை]

வேலணை அரசினர் வைத்தியசாலையில் முதல் பிரசவத்திற்காக கர்ப்பிணித் தாய்மார்கள் செல்லும் பிரசவத்திற்கு அங்கு அனுமதிக்கப்படுவதில்லையாம்.

இதனால் அந்த ஆஸ்பத்திரிக்கு மண்கும்பான், அல்லைப்பிட்டி, வேலணை, பள்ளம்புலம், சரவணை போன்ற இடங்களில் இருந்து வரும் கர்ப்பிணித் தாய்மார்கள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியுள்ளது. சிலர் பல கஷ்டத்தின் மத்தியில் யாழ். அரசினர் மருத்துவ மனைக்கோ அல்லது தனியார் மருத்துவ மனைக்கோ செல்லவேண்டிய நிலைக்குள்ளாகி வருகின்றனர்.

இவ் வைத்தியசாலையில் பிரசவத்துக்கு வேண்டிய உபகரணங்கள் இல்லாததாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [கு]

## நிர்வாகிகள்

[வேலணை]

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி கோவில் அறநெறிக்காவல் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஆலயமண்டபத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்: நா. நடராசா, தலைவர்: கா. நாகநாதி, உபதலைவர்: ம. க. சுப்பிரமணியம், செயலாளர்: தி. சிவசாமி, உபசெயலாளர்: ச. மகாலிங்கம், பொருளாளர்: பொ பேரின்பநாயகம், பரிபாலகர்: நா இராமச்சந்திரன், சொத்தரிமை அதிகாரி: நா மாலிங்கம் மற்றும் 8 பேர் கொண்ட உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் [கு]

# அமரர் இராசவைத்தியர் அ.க.குமாரசாமி

ஈழத்திருநாட்டின் தலைசிறந்த சித்தவைத்திய மேதையாகவும், தமிழ் தத்துவப் பகுதியில் எழுதுவினைஞராகவும், ஆங்கில ஆசிரியராகவும் அகில இலங்கைச் சித்தவைத்திய சங்கத்தில் 18 ஆண்டுகள் தலைவராகவும், வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் தர்மகர்த்தாவாகவும், வட்டுக்கோட்டைக் கிராமசபை உறுப்பினராகவும் ஆயுர்வேதக் கவுன்சிலின் அங்கத்தவராகவும் ஆபின் சபையின் அங்கத்தவராகவும், மனநோய் வைத்திய நிபுணராகவும், உறுதிமொழி ஆணையாளராகவும், சமாதான நீதிபதியாகவும் திகழ்ந்து இராச வைத்தியர் என்னும் உயர் வரிசையினைப் பெற்று சமூகஜோதியாக விளங்கிய பெரியார் அ. க. குமாரசாமி அவர்கள் கடந்த 23-7-79ல் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 23-8-79 வியாழக்கிழமையும் ஞாபகார்த்த அபிஷேக ஆராதனைவிழா வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவிலில் 24-8-79 வெள்ளிக்கிழமையும் நடைபெறுகின்றன. வைத்திய கலாநிதி திரு. அ. கந்தையா அவர்களுக்கும் கற்பகஅம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராக 13-5-1899ல் அவதரித்தார்.

வட்டுக்கோட்டை பிளவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த இவர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் ஆங்கிலக் கல்வியைக் கற்றுக்கொண்டார். இதன்பயனாக மூன்று ஆண்டுகள்வரை அரசாங்கத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றியபின் வட்டுக்கோட்டைப் பிளவத்தை அ. மி. பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக அருந்தொண்டாற்றினார். தமது பரம்பரையினரின் சித்த வைத்தியத்துறையில் நாட்டம் கொண்டதன் காரணமாக ஆசிரியத் தொழிலை உதறித்தள்ளிவிட்டு வைத்தியத்துறையில் ஈடுபட்டார். இவர் தமது நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆராய்ச்சியால் வைத்தியத் துறையிலே ஈடிணையற்ற வைத்திய மாமணியாகத் திகழ்ந்தார். அகில இலங்கை சித்தவைத்தியர் சங்கத்தில் 18 ஆண்டுகள் தொடர்ந்து தலைவராக இருந்த பெருமையும் இவருக்குண்டு. இவர் இந்த வைத்தியத்துறையிலே செய்த அளப்பரிய சேவைகளையும் பாராட்டத்தக்க புலமையையும் கண்டு போற்றிப் புகழ்ந்த இலங்கை அரசாங்கம் இவருக்கு ''இராஜவைத்தியர்'' என்னும் உயர்வரிசையினை வழங்கிக் கௌரவித்துள்ளது.

வைத்தியத்துறையிலே மாத்திரம் சேவைசெய்யவில்லை. கிராம மக்களின் நலன் கருதி வட்டுக்கோட்டை ஊர்மன்றத்தில் அங்கத்தவராக இருந்து பொதுமக்களுக்கு அளப்பரிய சேவை செய்துள்ளார். மன்றங்கள் பலவற்றை ஆரம்பித்து வைத்து அவற்றின் வளர்ச்சிக்கு வேண்டிய பொருளுதவியும் பணவுதவியும் செய்துள்ளார். வட்டு சிவன் தெய்வ நிலையமும வட்டுக்கோட்டை காந்திஜீ கிராம முன்னேற்றச் சங்கமும் இவரது சொந்த வளவிலேயே கட்டப்பட்டிருக்கின்றன. இவர் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் எல்லாம் அடிக்கல் நாட்டி அவற்றின் வளர்ச்சிக்குப் பணவுதவி செய்திருக்கின்றார். வட்டுக்கோட்டைப் பகுதியிலே முதல்தரமான வாசிகசாலையாகக் கொள்ளப்படும் கலைநகர் நேருஜீ சனசமூக நிலைய வாசிகசாலைக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிய பெருமை இவருக்கே உண்டு.

ஈழத்திருநாட்டிலே இணையற்ற மனநோய் வைத்திய நிபுணராகத் திகழ்ந்த இவருக்கு இலங்கை அரசாங்கம் உறுதிமொழி ஆணையாளர், சமாதான நீதிபதி முதலான சிறப்புப் பட்டங்களையும் வழங்கிக் கௌரவித்தது. வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவிலின் தர்மகர்த்தாவாக இருந்த இவர் சமூக, சமய, நாடக, கலை, இலக்கியத் தொண்டுகளும் ஏராளமாகச் செய்துள்ளார்.

நா. க. தங்கரத்தினம்

## மரண அறிவித்தல்

### செ. தவக்குமார்

உடுவில் கிழக்கைச் சேர்ந்தவரும், சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளை ஊழியருமான செல்லத்துரை தவக்குமார் மரணமானார். இவர் திரு. திருமதி செல்லத்துரை [சட்டத்தரணி ஐயக்கோன்] தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், கமலாதேவி [பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி]யின் அன்புக் கணவரும், ஜெசாந்தின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் உடுவில் கிழக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் இன்று வியாழக்கிழமை (23-08-79) பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெற்றுத் தகனக்கிரியைக்காக மருதனாமடம் பூவடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 3377

## மரண அறிவித்தல்

### ம.சி.சரவணமுத்து நாகரத்தினம்(சர்க்கரை)

கலட்டியைச் சேர்ந்த ம. சி. சரவணமுத்து நாகரத்தினம் (சர்க்கரை) [காசாளர், பரணி மருந்துச்சாலை, யாழ்ப்பாணம்] காலமாகிவிட்டார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், பிரேமலதா, தர்மலதா [ஆசிரியை, ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்], செல்வலதா, விஜயகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சர்வானந்த [தேசிய கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம், கொழும்பு]வின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை [23-8-79] மாலை 5-00 மணிக்குக் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும்.

51, அரசடி ரோட், கலட்டி, யாழ்ப்பாணம். 3376

### நல்லூர் திருவிழாவின்போது

# காணாமல்போன காரை பொலிசார் மீட்டனர்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் திருவிழாவின்போது காணாமற்போன கார் ஒன்று கோண்டாவிலுள்ள வீடொன்றில் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

லோகநாதன் என்பவர் குடும்பத்துடன் நல்லூர் திருவிழாவிற்கு சென்று விட்டு திரும்பிவந்து பார்த்தபோது விட்ட இடத்தில் காரைக் காணாததினால் அதிர்ச்சியடைந்த பொலிஸில் புகார் செய்தார்.

பொலிஸ் விசாரணையின்போது லோகநாதன் என்பவர், மாதகலை சேர்ந்த நவரத்தினம் என்பவரிடம் இக்காரை பத்தாயிரம் ரூபா கொடுத்து வாங்கியதாகவும் நவரத்தினம் என்பவர் பண்டத்தரிப்பை சேர்ந்த பொன்னம்பலம் ராஜகுலேந்திரனிடம் 25,000 ரூபாவை கொடுத்துவிட்டு இக்காரை வாங்கியிருந்ததாகவும், பின் லோகநாதனுக்கு விற்று முற்பணமாக 10,000 ரூபா பெற்றதாகவும் தெரியவந்தது.

விசாரணையை தொடர்ந்து சிறுகுற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி திரு. முத்துபண்டார தலைமையில் சென்ற பொலிஸார் கோண்டாவிலில் இக்காரை கைப்பற்றினர்.

சந்தேகத்தின் பேரில் நவரத்தினம், கோபால் ஆகியோரை கைது செய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

நீதிபதி திரு. இ. ராஜசேகரம், சந்தேக நபர்களை தலா 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். [கொ]

# சுவாமி சச்சிதானந்தா..

1-ம் பக்கத் தொடர்ச்சி

சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும், யாழ். சித்த ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் ஸ்ரான்லி வீதியிலுள்ள சித்த ஆயுர்வேதக் கல்லூரி மண்டபத்தில் உரை நிகழ்த்துவார்.

அன்று மாலை 6-00 மணிக்கு சுவாமிஜிக்கும், அவரது சீடர்களுக்கும் நல்லூர்-உடுவில் சச்சிதானந்த சிறுவர் சங்கம் யாழ். திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் வரவேற்பளிக்கும். யோகாசன நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

26ந் தேதி காலை சுவாமிஜியும், சீடர்களும் கண்டிக்குச் செல்வார்கள்.

**இலங்கைக்குப் புதியவரல்ல**

யோகிராஜ் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தா, பாரதநாட்டின் தென்பகுதியில் கோவையம்பதியைச் சேர்ந்த வணிகபுரி யென்னும் செட்டிபாளையத்தில், இராமசாமி என்ற பிள்ளைத் திருநாமத்துடன், செல்வம் கொழிக்கும் வசதிபடைத்த ஒரு குடும்பத்தில் அவதரித்தார். ஆன்மீகத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களையும், சாதுக்களையும், துறவிகளையும் தங்கள் வீட்டுக்கு அழைத்து உபசரிக்கும் நற்பண்பு சுவாமிஜியின் தாய் தந்தையருக்கு இருந்ததால், சாதுக்களுடனும் துறவிகளுடனும் நெருங்கிப் பழகி ஆன்மீகத்துறையில் ஈடுபடும் வாய்ப்பு சுவாமிஜிக்கு இளம் பராயத்திலேயே ஏற்பட்டது. இளம் வயதில் ஒரு சிறந்த மோட்டார்ப் பொறியியலாளராகத் திகழ்ந்த சுவாமிஜி, அவர் ஆன்மீகத்துறையில் செலுத்திய அக்கறையைத் தொடர்ந்து அவரை அப்பணியிலிருந்து விலகச்செய்தது. இறுதியில் சுவாமிஜியின் இல்லத்தரசியார் சடுதியாக மரணமடைய, சுவாமிஜி ஒரு முழுநேர ஆன்மீகத் தொண்டரானார். ஆதியில் பழனி ஆலயச் சாதுக்களுடனும், இராமகிருஷ்ண மிஷன் சாதுக்களுடனும், அரவிந்த ஆச்சிரமச் சாதுக்களுடனும், இரமண மகரிஷி ஆச்சிரமச் சாதுக்களுடனும் சேர்ந்து ஆன்மீகப் பணியாற்றிய சுவாமிஜி ஈற்றில் ரிஷிகேசத்தில் உள்ள சிவானந்த சரஸ்வதியின் ஆச்சிரமத்தில் சேர்ந்து பணியாற்றி 1949ம் ஆண்டில் சந்நியாசம் பெற்றார்.

சுவாமிஜி இலங்கைக்குப் புதியவர் அல்லர். அவர் இலங்கையில் 14 வருடங்கள் ஆன்மீகப் பணியில் ஈடுபட்டிருந்தார். உலகின் பல பாகங்களுக்குப் பலமுறை விஜயஞ் செய்து ஆன்மீகத் தொண்டாற்றிவரும் சுவாமிஜி பலராலும் நன்குமதிக்கப்படுகிறார்.

1966ம் ஆண்டு இரண்டு நாள் அமெரிக்க விஜயத்தை மேற்கொண்ட சுவாமிகள், அமெரிக்காவில் நிரந்தரமாகத் தங்கி ஆன்மீகப் பணிபுரிய வேண்டியதாயிற்று. அவரின் உபதேசங்களைப் பின்பற்றும் பல்லாயிரக்கணக்கான அவரின் சீடர்கள், அவர் அமெரிக்க நாட்டுக்கு விஜயஞ்செய்த அரை ஆண்டுக்குள் அங்கே ஒரு யோக சமாசத்தை ஸ்தாபித்து, யோக வகுப்புக்களை நடாத்துகின்றனர். இன்று அமெரிக்காவில் 30க்கு மேற்பட்ட யோக சமாசங்கள் சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்டு ஆன்மீகப் பணிபுரிந்து வருகின்றன. 1976ம் ஆண்டில் அமெரிக்கப் பிரஜையாகிய சுவாமிகளின் பெயரால் அமெரிக்காவில் இரு பெரிய ஆச்சிரமங்கள் இருக்கின்றன. சுவாமிகளின் உபதேசத்தால் அமெரிக்காவில் பலர் தங்களை, வாழ்க்கையையே மாற்றி அமைத்து, நல்வாழ்வு வாழ்ந்துவருகிறார்கள். அவர் பலமுறை தனது அமெரிக்கச் சீடர்களுடன் இலங்கைக்கு விஜயஞ்செய்திருந்தார். [=]

## இன்று

(யாழ்ப்பாணம்)

கரியாலை நாகபடுவான் மக்கள் கடைவீதியை தேசிய இளைஞர் திட்டம் மூலம் செப்பனிடுவதற்கான ஆரம்பவிழா இன்று காலை நடைபெறவுள்ளது.

விழாவிற்கு பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. செ. யோகநாதன் தலைமை தாங்குவார். திட்டத்தை தேசிய இளைஞர் சேவைமன்ற இயக்குனர் திரு என். கனகசூரியர் ஆரம்பித்து வைப்பார். மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (செ)

## தேர்தல் நடக்கும்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

### கருணாநிதி கருத்து

இப்போது எழுந்துள்ள நிலைமையில் பாராளுமன்றத்தைக் கலைப்பதைத் தவிர ஜனாதிபதிக்கு வேறுவழி இருக்கவில்லை என்று திமுக தலைவர் திரு மு கருணாநிதி தெரிவித்துள்ளார்,

டிசம்பர் மாத முடிவுக்குள் லோகசபை தேர்தல் முடிந்துவிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நேர்முகப் பரீட்சை நடைபெறவில்லை

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியிடம் வேலைகோரி விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை இதுவரை நடாத்தப்படவில்லை.

அரசாங்கம் சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு, வெற்றிடம் உண்டென அறிவித்தபோது இதுவரை விண்ணப்பங்களை அனுப்பியவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதி திறமை குடும்பநிலவரம், வயது இவற்றைக் கருத்திற் கொண்டு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுமென்றும், இதுவரை 15 ஆயிரம் விண்ணப்பங்கள் வந்துசேர்ந்திருப்பதாக வெளிவந்த செய்திகள் தவறென்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [க]

## மின் தடைக்கு காரணம்?

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரத்துக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் மின் கம்பங்களில் திருத்த வேலைகள் நடைபெறுவதால் இலசமயங்களில் யாழ் நகர்ப்பகுதியில் மின்சாரம் தடைப்படுகிறது என்று யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு.கே. சிவஞானத்திடம் மின் தடைகுறித்து வினவியபோது கூறினார். இதைவிட யாழ். மின்சாரப்பகுதியின் கோளாறினால் மின்தடை ஏற்படவில்லை என்றும் கூறினார். [செ]

## பஸ் பழுதானால் கட்டணம் வாபஸ்

(கொழும்பு)

பிரயாணத்தின்போது நடுவழியில் பஸ்வண்டிகள் நிற்க நேரிட்டால் டிக்கட் டணத்தைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கு ஏற்றவகையில் வீதிப் போக்குவரத்துச் சட்ட மூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் தற்போது இச் சட்டமூலத்தைத் தயாரிப்பதில் சட்டவரைஞர் திணைக்களம் ஈடுபட்டிருப்பதாகவும் போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். [கு]

## வண். கதிரேசன் மண்டலாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா இம்மாதம் 31-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கதிர்வேலாயுத சுவாமியின் கும்பாபிஷேகத்திலும், மண்டலாபிஷேகத்திலும் பங்குபற்றியவர்கள், பங்குபற்றவுள்ளவர்கள் யாவரும் கும்பாபிஷேகம் ஒன்றை செய்வித்த பலனைப் பெறுவார்கள் என்றும் மீண்டும் இதுபோன்ற மண்டலாபிஷேக விழா பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே நடைபெறும் என்றும் ஆலய பரிபாலகர் ஒருவர் தெரிவித்துள்ளார். [கு]

### காணவில்லை

20-8-79 அன்று ஆஸ்பத்திரி வைத்தியசாலையில் சில முக்கிய உறுதிகள் அடங்கிய பை ஒன்று தவறிவிட்டது. ஒப்படைப்பவர்க்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். விளம்பர இல 3378, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

3378

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49, Telegeram Eelanadu.
T.Phon: 389.